பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 21 | செவ்வாய்க்கிழமை | 05.09.2023 | அதிர்வு 35

## ஹாட்லி கல்லூரியில் 16 மாணவருக்கு 3 ஏ!

வெளியாகியுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 16 மாணவர்கள் 3 ஏ சித்தி பெற்றுள்ளனர். கணிதப் பிரிவில் 12 பேரும், விஞ்ஞானப் பிரிவில் 3 பேரும், வர்த்தகப் 03

# நீதிமன்றத்தை அச்சுறுத்துவதை அரசு உடனே நிறுத்த வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

"நாட்டின் ஜனநாயகத்தைச் சீரழிக்கும் வகையில் ஜனாதிபதி தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கையை நீதிமன்றத்தின் கௌரவ நீதிபதிகள் கூட பகிரங்கமாக விமர்சித்துள்ளனர். ஜனாதிபதி தலைமையிலான அரசு நீதிமன்றத்தின் மீது பல்வேறு அச்சுறுத்தல்கள், பல்வேறு குறுக்கீடுகள், அழுத்தங்கள் போன்ற வற்றைச் செய்வதை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். நாட்டில் சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம் மற்றும் மக்கள் இறைமைக்காக வலுவான மற்றும் உறுதியான நிலைப்பாட்டை 03



# ரணிலுடன் கைகோர்ப்பதற்கு சஜித்துக்கு இறுதி அழைப்பு!

## விடுக்கின்றார் அமைச்சர் ஹரின்



**கொழும்பு, செப்ரெம்பர் 05**

**"பதவி ஆசையில் அலைந்து திரியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்று வெட்கம் இல்லாமல் பகிரங்கமாகக் கூறியுள்ளார். இந்தப் பதவி ஆசையை மறந்துவிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்துச் செயற்படுமாறு அவருக்கு நான் இறுதி அழைப்பு விடுவதுடன் இறுதி எச்சரிக்கையையும் விடுகின்றேன்."**

**- இவ்வாறு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.** 03

# யாழ்.இந்துவில் 33 பேருக்கு 3 ஏ

## மாவட்டத்தில் கணிதம், விஞ்ஞானப் பிரிவுகளில் முதல் 5 இடங்களையும் பிடித்துப் பெரும் சாதனை

– என்.புவியரசன் –

2022 (2023) ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இணையத்தில் நேற்று வெளியாகியுள்ள நிலையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி இம்முறை கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரு 03

# தேசிய ரீதியில் முதலிடம் பெற்றவர்களின் விவரம்

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தொடர்பான விவரங்கள் வெளியாகியுள்ளன.


இதற்கமைய, தேசிய ரீதியில் கணிதப் பிரிவில் கொழும்பு றோயல் கல்லூரியின் பானுல பெரேரா முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

அதேநேரம், உயிரியல் 03

# சஜித்துடன் இணைந்த அசங்க நவரத்ன எம்.பி.

இலங்கை மக்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன, 05

## இரகசியம்



இறுதி யுத்தத்தின் போது ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிங்களப் படைகள் புரிந்த கொடுரங்களை அம்பலப்படுத்தி, பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பிரித்தானியாவின் 'சனல் –4' தொலைக்காட்சி ஊடகம் இந்த முறை, கடந்த நான்கு வருடங்களுக்கு முன் 02

# இவ்வருடம் இதுவரை 2 லட்சம் பேர் இலங்கையைவிட்டு வெளியேற்றம்

இவ்வருடம் இதுவரை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 2 லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

இந்த வருடத்தில் நேற்றுமுன்தினம் (செப்டெம்பர் 03) வரை பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட 2 லட்சத்து 26 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக வெளியேறியுள்ளனர்.

கடந்த ஆண்டில் (2022) மொத்தம் 3 லட்சத்து 11 ஆயிரம் இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

னர் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான சில இரகசியத் தகவல்களை பெரும் குண்டாக இன்று வெடிக்க வைக்க இருக்கின்றது.

இலங்கையில் நான்கு வருடங்களுக்கு முன்னர் 275க்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்கும், ஐந்நூறு பேர் வரைக் காயப்படுவதற்கும் காரணமாக அமைந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ஷக்களுக்கு விசுவாசமாகச் செயற்பட்டவர்கள் இருந்ததார்கள் என்று பிரித்தானியாவின் 'சனல் – 4' வெளியிடவுள்ள ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளதாக 'த டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து, கிழக்கில் கொடிகட்டிப் பறந்து, தனி ராஜ்ஜியம் நடத்தியவர் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன். எல்லோருக்கும் தெரிந்த சங்கதி அது.

அவரிடம் உதவியாளராக – தனிப்பட்ட செயலாளராக – செயல்பட்டவர் ஹன்சீர் ஆஸாத் மௌலானா. இவர் வழங்கிய சாட்சியங்களின் அடிப்படையில் இன்று வெளியாகும் ஆவணப்படம் உருவாக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த ஆஸாத் மௌலானா தனது கைப்பட தமிழில் எழுதிய அவரது வாக்குமூலம் என்ற பெயரில் ஓர் ஆவணத்தை ஆஸ்திரேலியாவில் இருக்கும் மனித உரிமை விவகாரங்களுடன் தொடர்புடைய மூத்த சட்டத்தரணி ஒருவர் எனக்கு மின்னஞ்சலில் அனுப்பி இருந்தார். நீண்ட வாக்குமூலம். சிறிய எழுத்துக்கள். ஆங்கிலத்தில் தொடுத்து எழுதுவது போல தமிழில் தொடுத்து எழுதப்பட்டிருந்தது. பல பக்கங்களில் ஒரு தொடர்கதை போல பல விடயங்களை விவரித்து இருந்தார் அதை எழுதியவர் எனத் தம்மை ஆஸாத் மௌலானா என்று குறிப்பிட்ட அவர்.

அதில் விவரிக்கப்பட்ட விடயங்களை நான் வாசித்து அதிர்ந்து விக்கித்துப் போனேன். பல மோசமான சம்பவங்கள், கொடூரமான செயற்பாடுகள், குரூரமான நடவடிக்கைகள் அதில் விலாவாரியாக விவரிக்கப்பட்டிருந்தன.

இலங்கையில் அவர் கண் முன் நிகழ்ந்த பல சம்பவங்களின் நெருக்கடி காரணமாக அவர் சுவிஸ் நாட்டுக்குத் தப்பிச் சென்று அங்கு அடைக்கலம் புகுந்து இருந்தார் என்று அப்போது அறிந்து கொண்டேன்.

அவரோ வெளிநாடு ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்தார். அந்த வாக்கு மூலமும் வெறும் கையெழுத்துப் பிரதியின் மின்னஞ்சல் வடிவம் மட்டுமே. சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட ஆவணமும் அல்ல. அது மாத்திரமல்ல, இலங்கைப் படைத் தரப்பில் சில உயர் அதிகாரிகளை, அவர்களின் செயற்பாடுகளை, இடங்கள், விவரங்கள், நேரங்கள், முகாம்கள் பற்றிக் குறிப்பிட்டு அவர்களின் வன்முறை பாங்கு நடவடிக்கைகளையும் அது விவரித்து இருந்தது. சிறையில் இருக்கும் பிள்ளையானை சிறைக்குள் தாம் போய்ச் சந்தித்த விடயங்கள், அவரை விடுவிக்க அழுத்தம் தரும் விதத்தில் சட்டத்துக்கு அப்பால் மறைவில் மேற்கொள்ளப்பட்ட பல சதி நடவடிக்கைகள் குறித்து எல்லாம் அஸாத் மௌலானா அதில் விவரித்து இருந்தார் என்று ஞாபகம்.

இந்த மின்னஞ்சல் பிரதியை மட்டும் வைத்துக்கொண்டு, இங்கு இலங்கையில் நான் ஊடகவியலாளனாக ஏதும் செய்ய முடியாது, அதற்கு வாய்ப்பு எதுவும் இல்லை என்ற எனது இயலாமையை அந்த மனித உரிமைகள் சட்டத்தரணிக்குத் தெரியப்படுத்தினேன்.

"இல்லை...இல்லை... நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். செய்யவும் முடியாது. அதற்குரிய முழுமையான சட்ட ஆவணம் அது அல்ல. சில பகுதிகளுக்கு இடையே இரகசியமாக பரிமாறப்பட்ட ஆவணத்தின் பிரதிகளை உங்கள் தகவலுக்காக அனுப்பினேன். நீங்கள் அறிந்து கொள்வதற்காக." – என்றார் ஆஸ்திரேலியாவில் வதியும் அந்தச் சட்டத்தரணி.

கொழும்பின் பிரபல சட்டத்தரணி ஒருவருக்கும் தகவலுக்காக அந்த ஆவணத்தை அனுப்பினேன். நீண்ட அந்த ஆவணத்தை விலாவாரியாகப் படித்து அறியும் நேரமும் பொறுமையும் அவருக்கு இருந்திருக்காது என்பதால் சில தினங்கள் கழித்து அதைப் பற்றி பிரஸ்தாபித்து, அதில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களை தொலைபேசியில் அவருக்குச் சுருக்கமாகக் குறிப்பிட முயன்றேன். ஆனால் என்னிலும் விட ஆழமாக அவர் அவ்விடயங்களைக் கிரகித்திருந்தார் என்பதை அவர் பேச்சில் இருந்து புரிந்து கொண்டேன். சட்டத்தரணி மூளையல்லவா...?

அந்த ஆவணத்தை எனக்கு அனுப்பிய ஆஸ்திரேலிய சட்டத்தரணிப் பெரியவரிடம் அந்த ஆவணத்தின் பிரதி இன்னும் நிச்சயமாக இருக்கும். நான் அந்த ஆவணத்தைப் பாதுகாப்பாகச் சேமிக்கவில்லை. காலவோட்டத்தில் என் மின்னஞ்சலில் 'லோட்' கூட அவற்றை நான் அழித்து விட்டேன்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நான் வாசித்த போது எனக்கு அதிர்ச்சி கொடுத்த விடயங்கள்தான் இப்போது – இன்று – காணொலியில் கட்டவிழ்ப் போகின்றன என்று நினைக்கிறேன்.

இந்தக் காணொலியில் அரச புலனாய்வுப் பிரிவு பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயின் நடவடிக்கைகள் பிய்த்து உதறப்படும் என்று கூறப்படுகின்றது. நான் வாசித்த அந்த வாக்குமூலப் பிரதியிலும் சுரேஷ் சலே குறித்துப் பல மோசமான விடயங்கள் பொதிந்திருந்தன என்று ஞாபகம். பிள்ளையான் – சலே கூட்டு பற்றியும், திட்டங்கள் பற்றியும் பல விடயங்கள் அதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

கடந்த நான்கு வருடங்களாக மேற்படி குண்டுத் தாக்குதல் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் இலங்கை ஆட்சி பீடத்திற்கு எதிராக அடிக்கடி சீறிக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டு வருகின்றார். இந்தக் குண்டு தாக்குதல்களுக்குச் சூத்திரதாரியான ஒரு படை அதிகாரியை அரசு பாதுகாக்கின்றது என்று சாரப்பட அவரது குற்றச்சாட்டு அமைந்திருக்கும். அவரது அந்தக் கருத்துக்களின் இடையே இழையோடுவதுவும் இந்த அதிகாரியை இலக்கு வைத்த கருத்துத்தான் என்று கூறப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதியே இந்தக் காணொலி 'சனல் – 4' அலைவரிசையில் ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே, தனது சட்டத்தரணி ஊடாக விடுத்த வேண்டுகோளுக்கு அமைய அந்த ஒளிபரப்பு பிற்போடப்பட்டதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும், சுரேஷ் சலேவிற்கும் இடையிலான தொடர்பு குறித்த அஸாத் மௌலானா வெளிப்படுத்தியுள்ள அனைத்து விடயங்களும் உண்மைக்கு புறம்பானவை எனவும், மௌலானா குறிப்பிடும் காலப்பகுதியில் சலே இலங்கையில் சேவையில் இருக்கவில்லை எனவும், சலே ஆவணங்களுடன் 'சனல் – 4' இற்குத் தெளிவுபடுத்தியுள்ளார் எனவும், அந்தப் பத்திரிகை செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று அந்த காணொலி இலங்கை ரீதியில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் பரபரப்பை ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

கடைசியாக ஒரு கொசுறுத் தகவல். யுத்தம் முடிந்த கால கட்டத்தில் புலிகளின் சர்வதேச தொடர்பாளரான 'கே.பி.' என அழைக்கப்படும் கே.பத்மநாதன் மலேசியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார் அல்லவா? அவரை கைவிலங்கிட்டு, அங்கிருந்து விமானத்தில் தம்முடன் கூட்டி வந்தவர் இந்த சலே தான்....!

# வவுனியா மாவட்டத்தில் கலைப் பிரிவில் புதுக்குளம் பாடசாலை மாணவி முதலிடம்



(கே.வசந்தரூபன்)

வவுனியா, ஓகஸ்ட் 05

வவுனியா மாவட்டத்தில் கலைப் பிரிவில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி ராம்குமார் கவிப்பிரியா முதலிடம் பெற்றுள்ளார்.

கடந்த 2022 (2023) ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று மாலை வெளியாகின.

அந்தப் பெறுபேற்றின் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த புதுக்குளம் மகா வித்தியாலய மாணவி செல்வி ராம்குமார் கவிப்பிரியா தமிழ், விவசாய விஞ்ஞானம், புவியியல் ஆகிய பாடங்களில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய ரீதியில் 194 ஆவது இடத்தையும் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

# வவுனியா மாவட்டத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் முதலாமிடம்

(கே.வசந்தரூபன்)

வெளியாகியுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேற்றில் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவில் வவுனியா மாவட்ட மட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் முதலிடங்களைப் பெற்றுள்ளனர்.

இதன் பிரகாரம் கணிதப் பிரிவில் நிசாந்தன் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும், விஞ்ஞானப் பிரிவில் விதுவர்சன் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் வர்த்தகப் பிரிவில் நான்கு மாணவர்கள் 3 பாடங்களில் ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

## ரணிலுடன் கைகோர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"சுயநல அரசியல்வாதியான சஜித் பிரேமதாஸ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் நிச்சயம் மீண்டும் படுதோல்வியைச் சந்திப்பார். அத்துடன் அவரின் அரசியலும் முடிவுக்கு வரும்" – என்றும் அமைச்சர் ஹரின் சுட்டிக்காட்டினார்.

"சஜித்துக்குப் பதவி ஆசை தீர வேண்டுமெனில் ரணிலுடன் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்க முடியும்" – என்றும் ஹரின் அறிவுரை கூறினார்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலின் வெற்றி வரலாற்று வெற்றியாகப் பதிவு செய்யப்படும்" – என்றும் அவர் அடித்துக் கூறினார்.

## தேசிய ரீதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விஞ்ஞானப் பிரிவில் தேசிய ரீதியில் மாத்தறை சுஜாதா வித்தியாலய மாணவி பிரமுதி பாஷனி முனசிங்க முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

அத்துடன், தேசிய ரீதியில் வணிகப் பிரிவில் கொழும்பு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயத்தின் கவ்தினி தில்சரனி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

2022 (2023) ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 2 இலட்சத்து 63 ஆயிரத்து 933 பேர் தோற்றியிருந்தனர். அவர்களில், ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 938 பேர் பல்கலைக் கழகங்களுக்குத் தகுதி பெற்றுள்ளனர். இது 63.3 சதவீத அதிகரிப்பாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 59 பாடசாலை பரீட்சார்த்திகளினதும், 25 தனியார் பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கு பொதுவாக சுமார் 4 மாதங்கள் வரை செல்லும். ஆனால், 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி நிறைவடைந்த போதிலும், விடைத்தாள் மதிப்பீட்டில் ஈடுபடும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக அது தாமதமானது. இந்தநிலையில், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த மே 20ஆம் திகதியே ஆரம்பமானது.

அன்று முதல், மிகக் குறுகிய காலத்துக்குள் விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்தநிலையில், 2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடத்துவதற்குப் பரீட்சைகள் திணைக்களம் முன்னதாகத் திட்டமிட்டிருந்தது.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அந்தப் பரீட்சைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 21ஆம் திகதி வரை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நடந்து முடிந்த 2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் மீண்டும் 2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இருப்பின், எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரையில் www.onlineexams.gov.lk என்ற இணையத் தளம் ஊடாக விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.இந்துவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவுகளிலும் முதல் 5 இடங்களையும் பிடித்துப் பெரும் சாதனை புரிந்துள்ளது.

இதற்கமைய விஞ்ஞானப் பிரிவில் முறையே ஆனந்தஜோதி வித்தியாசாகர், கண்ணன் பவிதரன், நாகசேனன் சாரங்கன், தர்மலிங்கம் அமலன், ரகுதாதன் தனுசன் ஆகியோர் முதல் 5 இடங்களையும் பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் சிறிபண்டாகரன் சிநேகன், லெஸ்லி பாஸ்கரதேவன் அபிசேக், சந்திரசேகரம் அபிசேகன், பகீரதன் திபேக், மொஹமட் நிஸ்பார் மொஹமட் இஸ்சாத் ஆகியோர் முதல் 5 இடங்களையும் பெற்றுள்ளனர். அதேவேளை, விமலேஸ்வரன் கிசாலன் 6ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, யாழ். இந்துக் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 33 பேர் 3 பாடங்களிலும் ஏ தர சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலைநிறுத்துவதற்கு நீதிமன்றமும் நீதிபதிகளும் முன்நின்றமைக்கு நன்றியையும் மரியாதையையும் தெரிவித்துக் கொள்கின்றோம்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்தின் மீதான இந்த வெட்கமற்ற செயலை அரசு உடனடியாக நிறுத்தவேண்டுமென்றும், நீதித்துறையில் செலுத்தப்படும் ஒவ்வொரு செல்வாக்கும் இந்த நாட்டின் ஜனநாயகத்தை அழிக்கும் பாரிய சதியாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் மாற்று அரசும் முற்போக்கான எதிர்க்கட்சியாகவும் ஐக்கிய மக்கள் சக்தி தடைகள் மற்றும் சமன்பாடுகள், அதிகாரப் பகிர்வு போன்ற கருத்துக்களின் மூலம் ஜனநாயகத்தின் 3 தூண்களான சட்டமன்றம், நிறைவேற்றதிகாரம் மற்றும் நீதித்துறையைப் பலப்படுத்தி நாட்டு மக்கள் சார்பாக நாட்டின் உச்ச சட்டத்தின் பாதுகாவலர்களாகச் செயற்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரபட்சமின்றி வெளிப்படைத் தன்மையுடன் நீதிமன்றத்தின் நீதிபதிகளால் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவுகளையும் பாதுகாப்பதற்காக மக்கள் பிரதிநிதிகளாக எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன் நிற்கும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹாட்லி கல்லூரியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவில் ஒருவரும் 3 ஏ சித்தி பெற்றுள்ளனர் என்று ஹாட்லிக் கல்லூரி அதிபர் ரி.கலைச்செல்வன் அறிவித்துள்ளார்.

# நல்லூரான் 15 ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழவில் 15ஆம்நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி, தெய்வானை சமேதராக முருகப்பெருமான் கிடாய் வாகனத்தில் வீதியுலாவந்தார். அதன் பின்னர் இரவு 7.30 மணியளவில் அருணகிரிநாதர் உற்சவமும் சிறப்புற இடம்பெற்றது.

படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்
















# 13 தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## அவரது கட்சிச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 05

அரசமைப்பின் 13ஆம் திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் மோடியிடம் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார். அதனையே உள்நாட்டிலும் தெரிவித்திருந்தார்.

அதனால் 13தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசமைப்பின் 13ஆம் திருத்தம் இந்த நாட்டின் சட்டம். அதனால் 13ஐ நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்.

13ஆம் திருத்தத்தை செயற்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

அதில் பொலிஸ் அதிகாரத்தை செயற்படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதனால் பொலிஸ் அதிகாரம் தவிர ஏனைய அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இந்திய பிரதமர் மோடியிடம் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று 13ஆம் திருத்தத்தை செயற்படுத்துவதில் ஏதாவது தடைகள் ஏற்பட்டால், வடக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தனியான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்வதாகவும் இந்திய பிரதமர் மோடியிடம் ஜனாதிபதி உறுதியளித்திருக்கிறார்.

வேறு ஜனாதிபதிகள் 13ஐ செயற்படுத்துவதில்லை என நாட்டுக்குள் தெரிவிக்கும் அதேநேரம் இந்தியாவுக்கு சென்று "13 பிளஸ்" என தெரிவித்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க 13தொடர்பாக நாட்டில் தெரிவித்து வரும் விடயங்களையே இந்தியப் பிரதமரிடமும் தெரிவித்திருக்கிறார்.



அதனால் அரசாங்கத்தில் இருக்கும் சிலர் அரசமைப்பின் 13ஆம் திருத்தம் தொடர்பாக என்ன கருத்தை தெரிவித்தாலும் 13தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதனால் ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. 13ஐ செயற்படுத்த வேண்டும் என்பதில் ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறார் என்றார்.

# முகாமிலிருந்து இயந்திரத் துப்பாக்கியுடன் வீட்டுக்கு நழுவிய சிப்பாய் மடக்கப்பட்டார்

## மாங்குளம் ரயில் நிலையத்தில் வைத்துக் கைது

பளை இயக்கச்சி இராணுவ முகாம் ஒன்றிலிருந்து ரி – 56 ரக இயந்திரத் துப்பாக்கி மற்றும் நான்கு மகசீன்களுடன் குருநாகல் பிரதேசத்தில் உள்ள தனது வீட்டுக்குச் செல்ல முற்பட்ட இராணுவ சிப்பாய் ஒருவர் மாங்குளம் ரயில் நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இயக்கச்சி முகாம் ஒன்றில் பணியாற்றும் இராணுவச் சிப்பாய் ஒருவர் விடுமுறையில் வீட்டுக்குச் செல்லும் வேளையில் தனது வ–56 ரகத் துப்பாக்கியையும் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளார்.



விடுமுறையில் செல்லும் இராணுவச் சிப்பாய் துப்பாக்கியை ஒப்படைக்காமல் சென்றமையால் முகாமில் பரபரப்பான சூழல் ஏற்பட, முகாம் இராணுவத்தினர் சிப்பாயைத் தேடி பளை ரயில் நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

ஆனால், அந்தச் சிப்பாய் பளை ரயில் நிலையத்துக்குச் செல்லாமல் கொடிகாமம் சென்று, அங்கிருந்து குருநாகல் செல்வதற்காக ரயிலில் பயணித்துள்ளார்.

இந்த நிலையில், இராணுவ அணி ஒன்று சிவில் உடையில் பளை ரயில் நிலையத்தில் ஏறி அந்தச் சிப்பாயைத் தேடியபோது அவர் ரயிலுக்குள் கண்டுபிடிக்கப்பட்டார்.

அச்சமயம் ரயில் கிளிநொச்சி, அறிவியல் நகர் ரயில் நிலையத்தை அடைந்தது.

உடனடியாக இராணுவத்துக்குத் தகவல் வழங்கப்பட்டு, இராணுவப் பொலிஸார் மாங்குளம் ரயில் நிலையத்தில் வைத்துச் சிப்பாயைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சிப்பாய் இராணுவப் பொலிஸாரிடம், குடும்பத் தகராறு காரணமாகத் துப்பாக்கியைத் தான் எடுத்துச் சென்றார் எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட சிப்பாய் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## சஜித்துடன் இணைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

சமூக நீதி, ஜனநாயகத்துக்கான பொதுவான பயணத்தின்போது இணைந்து செயற்படுவதற்கு இதன்போது அவர் இணக்கம் தெரிவித்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணியில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு இவர் வெற்றி பெற்றார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காலகட்டத்தில் சுயாதீன அணியாகச் செயற்பட்டார். விமல் தரப்புடனும் இவர் கூட்டணி வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வலி போக்கும் வழி

"இலங்கையிலுள்ள காணாமல்போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்திற்கு இதுவரை 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதில் 4 ஆயிரத்து 18 முறைப்பாடுகள் மீது பூர்வாங்க விசாரணை செய்துள்ளோம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 15 பேரை நேரடியாகச் சந்தித்துக் கண்டு பிடித்துள்ளதுள்ளோம். கண்ணீருடன் வாழுகின்ற இந்த மக்களுடைய கண்ணீருக்கும், அவர்களுடைய துன்ப, துயரங்கள், கவலைகள், வலிகளுக்கும் தீர்வு காணும் விதத்தில் நிச்சயமாக எமது அலுவலகம் சார்பிலே எம்மால் முடிந்த வரையில் தீர்க்கமான தீர்மானங்களை எடுப்போம்."- எனக் காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலக ஆணையாளர்களில் ஒருவரான யோகராஜா தெரிவித்திருக்கின்றார்.

அவரது கூற்றில் இரண்டு கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

ஒன்று - காணாமல் போனோர் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பான விடயத்தில் காத்திரமான முயற்சிகள், நடவடிக்கைகள் தங்களின் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என்பது.

அடுத்தது - காணாமலாக்கப்பட்டோரின் உறவினருக்கு அதனால் ஏற்பட்டுள்ள துன்ப, துயரங்கள், கவலைகள், வலிகள் போன்றவற்றுக்கும் அவர்களின் கண்ணீருக்கும் முடிவு காணும் வகையில் மேற்படி அலுவலகம் சார்பில் முடிந்தவரையில் தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்படும் என்ற உறுதிமொழி.

இந்த இரண்டு குறித்தும் தமிழ் மக்கள் திருப்திப்படுவதற்கு எதுவுமே இல்லை என்பதுதான் உண்மை நிலைமையாகும்.

15 ஆயிரம் முறைப்பாடுகளில் ஆக பதினைந்து பேர் தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள். இது 'மலையைக் கொல்லி எலியை பிடித்த' கதை.

அடுத்ததுதான் மிக முக்கியமான விடயம். காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் கண்ணீரையும், வலிகளையும், துன்ப துயரங்களையும் துடைப்பது பற்றிய உறுதிமொழி.

அதைப் பற்றிப் பேசிய அந்த அலுவலகத்தின் ஆணையாளர், அந்த உறவுகளுக்கு வழங்கப்படக் கூடிய தற்காலிக நிவாரணங்கள், இழப்பீடுகள், நிரந்தரக் கொடுப்பனவுகள், உதவிகள் குறித்துத்தான் விவரிக்கின்றார்.

அவை மூலம் அந்த உறவுகளின் வலியையும், துன்ப துயரங்களையும், கவலையையும் களைய முடியும் என்பது அறிவார்ந்த பேச்சு அல்ல.

காணாமலாக்கபட்டோரின் உறவுகளின் மனநிலையைப் புரிந்து கொள்ளாத அதிகார வர்க்கத்தின் பேச்சுச் சாயலிலேயே அவரது கருத்து அமைந்துள்ளது. அந்த உறவுகளின் அடிப்படை மன உணர்வை - எதிர்பார்ப்பை - புரிந்து கொள்ளாதவர்போல அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார் போலும்.

காணாமலாக்கப்பட்டோருக்கான விடயத்தில் பாதிப்புற்றோருக்கு இழப்பீடு வழங்குவது முக்கியமானது. பிரதானமானதுதான். அதை மறுப்பதற்கு இல்லை.

ஆனால், அதற்கு முன்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை கண்டுபிடிக்கப்பட வேண்டும். அதற்கான விசாரணைகள் சர்வதேச நியமங்களுக்கு அமைய முன்னெடுக்கப்பட வேண்டும். தவறிழைத்தோர், குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்பட வேண்டும். அத்தகைய நியாயங்களை - மிக முக்கியமான அடிப்படை விடயங்களை - மூடி மறைப்பதற்கான எத்தனமாக இழப்பீடு வழங்கும் மேற்படி அலுவலகத்தின் நடவடிக்கைகள் அமையக்கூடாது. அதுதான் முக்கியம்

காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, தவறிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளின் மேல் கட்டப்படும் விடயங்களே அந்த உறவுகளின் வலியையும் துன்ப துயரங்களையும் ஓரளவுக்கு போக்க வல்லன.

# களுத்துறை விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

களுத்துறை வஸ்கடுவ வாடியமன்கட சந்திக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனக் களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறையிலிருந்து வஸ்கடுவ வாடியமன்கட சந்திக்கு அருகில் வந்த பஸ்ஸுடன் ஓட்டோ மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வஸ்கடுவ பிரதேசத்தில் வசிக்கும் நான்கு பிள்ளைகளின் தந்தையான சுகத் தயானந்த என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டு விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் களுத்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# உறங்கிக் கொண்டிருந்தவரை மிதித்துச் சென்ற காட்டுயானை

திருகோணமலை – மொரவெவ, நாமல்வத்தை பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட காட்டுப்பகுதியில் கால்நடைகளை காவல்காத்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை நேற்று அதிகாலை காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்துள்ளார்.

இந்த நபர் உறங்கிக் கொண்டிருக்கும்போதே யானை ஏறி மிதித்துக் கொண்டு சென்றதாகத் தெரிய வருகின்றது.

இத்தாக்குதலில் மொரவெவ பிரதேசத்தை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 42 வயதுடைய டபிள்யூ. நியாஸ் என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் மஹாதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக திருகோணமலை பொதுவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# தேற்றாத்தீவு விபத்தில் இருவருக்குக் காயம்!



மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் தேற்றாத்தீவு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கல்முனையிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த வான் ஒன்றும், மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த இரு மோட்டார் சைக்கிள்களும், ஒன்றோடு ஒன்று மோத்தியதாலே இவ்விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இரு மோட்டர் சைக்கிள்களில் தனித் தனியாக பயணித்த இருவரும் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் அவர்களில் ஒருவர் மேலதிக சிகிக்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனக் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்துச் சம்பவத்தில் வான் மற்றும் இரு மோட்டார் சைக்கிள்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளன.

# மாணவர்களின் மொபல் பாவனை; கட்டுப்படுத்தச் சட்டம் வருகிறது!

பாடசாலை மாணவர்களின் கைத்தொலைபேசிப் பாவனைக்கு கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் அது தொடர்பான சட்டக் கட்டமைப்பை தயாரிப்பதற்கும் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 18 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி பாவனைக்கான தடைச் சட்டத்தை கொண்டு வரத் தயார் எனவும், இது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கைத்தொலைபேசிகள் மற்றும் சமூக ஊடகங்கள் சிறுவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன எனவும், மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் குழந்தைகள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்றும் அவர் கூறினார்.

பல சிறுவர்கள் கையடக்கத் தொலைபேசிகளினால் தமது வாழ்வை நாசமாக்கிக் கொண்டிருக்கின்றனர் எனவும்,



இன்று அவர்கள் பாடசாலைக்கு கையடக்கத் தொலைபேசியைக் கூட எடுத்துச் செல்கின்றனர் எனவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

# கொழும்பு விபத்தில் தமிழ்ச் சிறுவன் பலி

வாகன விபத்தில் 15 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு, மகரகம பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் பாரவூர்தி ஒன்று மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த சிலம்பரசன் வாகீசன் (வயது 15) என்ற சிறுவன் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 27 வயது இளைஞர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். குறித்த இளைஞர், உயிரிழந்த சிறுவனின் உறவினர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்துக்குக் காரணமான பாரவூர்தியின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் இராக்கினி ஆலயத்தில் உண்டியல்கள் உடைத்துத் திருட்டு







மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் எருக்கலம்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டவெளி புனித வேத சாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் உள்ள இரு உண்டியல்கள் உடைக்கப்பட்டு பல லட்சம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

இந்த ஆலயம் 1544 ஆண்டு ஆரம்பித்த வரலாற்றுச் சிறப்பை கொண்டதாகும். அந்தக் காலம் தொட்டு இன்று வரை தோட்டவெளி வேத சாட்சிகளின் இராக்கினி ஆலயம் சிறிய ஒரு ஆலயமாகவே இருந்து வருகின்றது.

இந்த ஆலயத்திற்கு நாடளாவிய ரீதியில் யாத்திரிகர்கள் பல்லாயிரக்கணக்கானோர் வந்து போகின்றனர். அவர்கள் ஆலய வளாகப் பிரதான பகுதியில் உள்ள மணல் மற்றும் எடுக்கப்படும் மனித எலும்புத் துண்டுகளையும் கொண்டு சென்று தமது வேண்டுதல்களை நிறைவேற்றும் புதுமை மிகு ஆலயமாக திகழ்கிறது.

இத்தகைய சிறப்பைக் கொண்ட ஆலயத்தின் பிரதான உண்டியல்கள் நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது.

இந்த உண்டியலில் உள்ள பணம் ஆலயத் தேவைக்காக கடந்த இரண்டு வருடங்களாக எடுக்காமல் விட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில்இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இரண்டு உண்டியல்களுக்குள்ளும் பல லட்சம் ரூபாப் பணம் இருக்கலாம் என ஆலயக் காப்பாளர் மற்றும் கிராமத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. எருக்கலம்பிட்டி பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

Build Your Dream home with us
NORTH WALL ENGINEERING
Nelliyady, Jaffna.
Our Recent Projects

"Experience a professional service like no other"
Our Services
- Architectural Designing.
- Structural Planning.
- 2D & 3D Drawing.
- BOQ Assessment.
- Interior Designing.
- Landscaping.
For Quotations Contact us on
0777 818 208 / 0774 002 766

# எல்லை தாண்டும் மீன்பிடிப் படகுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



ஆழ்கடல் மீன் பிடிப் படகுகள் சர்வதேச எல்லைகளைத் தாண்டி தொழிலில் ஈடுபடுவதனால் ஏற்படக்கூடிய பாதகங்கள் தொடர்பாக தெளிவுபடுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையின் கடல் எல்லைகளைத் தாண்டிச் சென்று சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகள் மனிதாபிமான நடவடிக்கையாக ஒரு வார காலத்தினுள் விடுவிக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

அகில இலங்கை ஆழ்கடல் மீன் பிடிப் படகு உரிமையாளர் சங்கத்துடன் நேற்று அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட ஆழ்கடல் மீன் பிடிப்படகுகள் கடற்றொழில் அமைச்சின் படகுக் கண்காணிப்புப் பிரிவினரால் அவதானிக்கப்பட்டு வருவதுடன் அவ்வாறு எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்டமைக்காக 185 இற்கு மேற்பட்ட படகுகள் கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் கலந்துரையாடப்பட்ட நேற்றைய கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த சங்கத்தின் பிரதிநிதிகள், படகில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கருவி போதிய மின்சார மின்மையால் செயலிழக்கும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன எனவும், அது போன்ற சந்தர்ப்பங்களில் எல்லை தாண்டி மீன் பிடிக்க வேண்டிய நிலையேற்படும் எனவும் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள், தற்போது தடுத்த வைக்கப்பட்டுள்ள படகுகளை மனிதாபிமான அடிப்படையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளைச் செய்யும் படகின் படகோட்டிகளுக்குக் கடற்றொழில் அமைச்சால் உரிய தண்டனை வழங்குவதில் தமக்கு ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையிலுள்ள அனைத்து ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளும் சர்வதேச சட்டத்தின் பிரகாரம் வி.எம்.எஸ். கட்டமைப்பின் ஊடாக கண்காணிக்கப்படுகின்றன எனவும், தவறு செய்யும் படகுகளுக்கு உரிய தண்டனை வழங்கப்படாவிட்டால் சர்வதேச அமைப்புக்களால் தடை விதிப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது எனவும், எனவே எமது கடற்றொழிலைப் பாதுகாப்பதற்காக கண்டிப்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது எனவும், அதற்கு கடற்றொழிலாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது மிகவும் அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

மேலும், சர்வதேச கடற்பரப்பில் தவறு செய்யும் ஒருசில படகுகள் காரணமாக எமது கடற்றொழில் முற்றாக அழிவடைவதற்கு இடமளிக்க முடியாது எனவும்,



நாட்டுக்குப் பெருமளவு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுக்கும் இத்தொழிலைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் என்று சுட்டிக்காட்டியதுடன் எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்டு தடைவிதிக்கப்பட்ட பல படகுகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளன எனவும், விரைவில் இந்த விடயம் தொடர்பாக பூரணமாக ஆராய்ந்து எஞ்சியுள்ள ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளையும் மனிதாபிமான ரீதியில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், தொடர்ந்தும் இவ்வாறான தவறுகளைச் செய்தால் அவ்வாறு தவறு செய்யும் படகுகளுக்கு 6 மாதங்கள் தடை விதிப்பதற்கான சட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, அமைச்சின் செயலாளர் இந்து இரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சு மற்றும் திணைக்களத்தின உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# நீர்மின் உற்பத்தி 14 வீதத்தால் அதிகரிப்பு: இராஜாங்க அமைச்சர் இந்திக தெரிவிப்பு

நீர் மின் உற்பத்தி 14 வீதம் வரை அதிகரித்துள்ளது என மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.


நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்கின்ற போதிலும், நீர் மின் நிலையங்களை சூழவுள்ள பகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவு மழைவீழ்ச்சி பதிவாகவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வறட்சியினால் நீர் மின் உற்பத்தி கடந்த நாள்களில் 11 வீதத்திற்கும் 12 வீதத்திற்கும் இடையில் வீழ்ச்சியடைந்திருந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சமனல வாவியில் ஏற்பட்டுள்ள நீர் கசிவை சீரமைப்பது தொடர்பில் மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் மற்றும் மின்சார சபையின் பொறியியலாளர்கள் இணைந்து இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர் என இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

சமனல வாவியின் 6 இடங்களில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.



# ஆஸ்பத்திரிகளில் நோயாளருக்கு உணவு விநியோகம் இடைநிறுத்தம்

## மட்டு. மாவட்டத்தில் இந்த நிலைமை

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள ஆதார வைத்தியசாலை, மாவட்ட மற்றும் கிராமிய வைத்திய சாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலை பணியாளர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்ட உணவு கடந்த முதலாம் திகதியுடன் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் நோயாளிகள் மற்றும் வைத்திய சாலைப் பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ச் ஒன்றிணைந்த சுகாதார ஊழியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் மாணிக்கராஜா லோகராஜ்குமார் தெரிவித்தார்.

இந்த இலவச உணவு இடைநிறுத்தப்பட்டது தொடர்பா. அவர் நேற்றுத் திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தினால் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் பணியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் உணவு வழங்கும் நிறுவனங்கள் ஊடாக 3 நேர சமைத்த இலவச உணவு வழங்கப்பட்டு வந்தது.

இவ்வாண்டு இந்தச் சேவை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நிதி தற்போது முடிவடைந்துள்ளதால், உணவு வழங்கும் சேவைக்கான ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட ஒப்பந்த காரர்களுக்கு அவற்றைத் தற்காலிகமாக இடைநிறுத்தி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கடிதம் மூலம் அறிவித்தமையையடுத்து இலவச உணவு வழங்கல் கடந்த முதலாம் திகதியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது

இதனால் மாகாண பணிப்பாளர் நிர்வாகத்தின் கீழ் உள்ள – மட்டு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட – வாழைச்சேனை, ஏறாவூர், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்திய சாலைகள், மாவட்ட, கிராமிய வைத்திய சாலைகளான சுமார் 22 வைத்திய சாலைகளுக்கான இலவச உணவு வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளதால் கஷ்ட பிரதேசங்களானதூர இடங்களில் இருந்து வந்து, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் அந்தந்த வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தூர இடங்களில் இருந்து வந்து தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் தமக்கான உணவைப் பெறுவதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர். அதேவேளை வைத்தியசாலையகளில் கடமையாற்றும் பணியாளர்களும் பாதிக்கப்பட்டுளனர். மாதம் 55 ஆயிரம் ரூபா வரையிலான தமது சம்பளக் கொடுப்பனவில் வாழ்ந்துவரும் இவர்களுக்கு இலவச உணவு திட்டம் பெரும் உதவியாக இருந்தது. இந்த உணவு நிறுத்தப்பட்டதால் அவர்களும் பெரும்பாதிப்படைந்துள்ளனர்.

எனவே தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள இலவசமாக உணவு வழங்கலை மீண்டும் உடனடியாக வழங்க இரசு முன்வர வேண்டும் என அராங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதிக்கு அச்சுறுத்தல்: 19 வயது இளைஞர் கைது!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தமது முகப்புத்தகக் கணக்கில் பதிவிட்டிருந்த இளைஞர் ஒருவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் எப்பாவல, மெடியாவ பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒருவரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்புத்தேகம மற்றும் எப்பாவல பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# விடுதியொன்றிலிருந்து பெண் சடலமாக மீட்பு

தலங்கம – நெரலு உயன பகுதியில் உள்ள விடுதியொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் கழுத்து பகுதியில் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது

உயிரிழந்தவர் 46 வயதுடைய உளநல மருத்துவர் ஒருவரென விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நேற்று இரவு இந்தச் சடலம் விடுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

சடலமாக மீட்கப்பட்ட பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாமென சந்தேகம் வெளியிட்டுள்ள தலங்கம பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# பாரதியாருடைய கொள்ளுப்பேரன் நேற்று மட்டு. இ.கி.மி. சிறுவர் ஆச்சிரம் வருகை


( வி.ரி.சகாதேவராஜா)

மஹாகவி பாரதியாருடைய கொள்ளுப்பேரன் கலாநிதி.இராஜ்குமார் பாரதி நேற்றுத் திங்கட்கிழமை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் ஆச்சிரமத்திற்கு விஜயம் செய்தார்.

அவரை மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் இல்லத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் வரவேற்றார்.

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அடிகளார் அழகியல் கற்கை நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி, பேராசிரியர் சி. மௌனகுரு, உதவிக் கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, முன்னாள் தவிசாளர் கிருஷ்ண பிள்ளைஜெயசிறில்ஆகியோரும்கலந்து சிறப்பித்தார்கள்.

இல்ல மாணவர்களுடன் அளவளாவிய கலாநிதி இராஜ்குமார் பாரதி தமது உரையில் பாரதியார் பாடல்களை நினைவுகூர்ந்தார்.












# துன்னாலை சதா சகாய மாதா ஆலய

# திருவிழா ஞாயிறு மாலை ஆரம்பம்



**ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்**

யாழ். கரவெட்டி துன்னாலை சதா சகாய மாதா ஆலயத்தின் வருடாந்த் திருவிழா ஆலய பிரார்த்தனையைத் தொடர்ந்து நேற்று முன் தினம் ஞாயிற்று கிழமை 03ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பங்குத்தந்தை சாள்ஸ் ஜஸ்டின் தலைமையில் கொடியேற்றம் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து நவநாள் பூஜைகளில் முதலாம் நாள் பூஜை அருட்தந்தை விஜின்ரஸ் அவர்களின்-ால் இடம்பெற்று ஒப்புக்கொடுக்கப் பட்டது

எதிர்வரும் 09ஆம் திகதி அன்னையின் வீதி வலம் வருகை இடம்பெற்று, 10 ஆம் திகதி காலை 7மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி பங்கு தந்தை சாள்ஸ் ஜஸ்டின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டு விழா நிறைவுபெறும்.



# நுண்ணுயிர்க்கொல்லி மருந்தினால் உயிரிழந்தவரின் உயிரியல் மாதிரிகள் இந்தியாவிற்கு அனுப்பி வைப்பு

கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் நுண்ணுயிர் கொல்லிமருந்து வழங்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தவரின் உயிரியல் மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக இந்தியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

இந்த நோயாளருக்கு வழங்கப்பட்ட கோ அமொக்ஸிக்லவ் (Co-amoxiclav) என்ற நுண்ணுயிர் கொல்லி மருந்தின் மாதிரிகள் மேலதிக விசாரணைக்காக ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய விசாரணைகளின் பெறுபேறுகள் கிடைத்த பின்னரே மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வெட்டுக் காயத்திற்கு சிகிச்சை பெற்ற 50 வயதான நபரே நுண்ணுயிர் கொல்லி மருந்து வழங்கப்பட்டதை அடுத்து உயிரிழந்துள்ளார்.

# காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்திற்கு 15 ஆயிரம் முறைப்பாடுகள்; 15 பேர் கண்டுபிடிப்பாம்




(கனகராசா சரவணன்)

இலங்கையிலுள்ள காணாமல் போன ஆள்கள் தொடர்பான அலுவலகத்திற்கு இதுவரை 14 ஆயிரத்து 988 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதில் 4 ஆயிரத்து 18 முறைப்பாடுகள் மீது பூர்வாங்க விசாரணை செய்துள்ளோம். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் 15 பேரை நேரடியாகச் சந்தித்துக் கண்டு பிடித்துள்ளதுள்ளோம். கண்ணீருடன் வாழுகின்ற இந்த மக்களுடைய கண்ணீருக்கும், அவர்களுடைய துன்ப, துயரங்கள், கவலைகள், வலிகளுக்கும் தீர்வு காணும் விதத்தில் நிச்சயமாக எமது அலுவலகம் சார்பிலே எம்மால் முடிந்தவரையில் தீர்க்கமான தீர்மானங்களை எடுப்போம். – எனக் காணாமல் போனே ஆள்கள் பற்றிய அலுவலக ஆணையாளர்களில் ஒருவரான யோகராஜா தெரிவித்தார்.

காணாமல் போன ஆள்கள் தொடர்பான அலுவலகத் தலைவர் சட்டத்தரணி மகேஸ் கத்துரங்க, ஆணையாளர்களில் ஒருவரான யோகராஜா ஆகியோர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் உல்லாச விடுதி ஒன்றில் நடாத்திய ஊடக மாநாட்டில் ஆணையாளர் யோகராஜா மேற்படி தகவலை வெளியிட்டார்.

இந்த அலுவலகம் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அலுவலகத்திற்கு இதுவரையில் 14 ஆயிரத்து 988 முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளன. இதனைக் காலத்தின் அடிப்படையில் 3 பிரிவுகளாக பிரித்தோம். அதில் 2000 ஆம் ஆண்டில் இருந்து 2020 வரையிலும் முதலாம் தரத்திலும், 1990 ம் ஆண்டில் இருந்து 2000 ஆயிரம் ஆண்டு வரையும் இரண்டாம் தரத்திலும், 1990ம் ஆண்டுக்கு முற்பட்டதை 3 ஆம் பிரிவாகவும் பிரித்துள்ளோம்.

இதனடிப்படையில் முதலாவது தரத்திலுள்ள விசாரணைகள் ஆரம்பித்துள்னோம். இதில் 6 ஆயிரத்து 25 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதன. இந்த முறைப்பாட்டில் இன்று வரைக்கும் 4 ஆயிரத்து 18 முறைப்பாடுகள் தொடர்பில் பூர்வாங்க விசாரணை செய்துள்ளோம்.

இருந்தபோதும், எமது விசாரணை சமயத்தில் முல்லைத்தீவு, மட்டக்களப்பு நகர் போன்ற பல இடங்களில் பல்வேறுபட்ட எதிர்ப்புக்களைச் சந்தித்துள்ளோம். எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் செய்வது அவர்களது உரிமை. அதனை அவர்கள் செய்வதற்கு நாங்கள் என்றுமே தடையில்லை. எங்களுக்கு கொடுக்கப்பட்ட அந்தக் கடமைகளை நாம் சரிவர செய்துகொண்டிருக்கின்றோம்.

முதலாவது பிரிவில் 6025 முறைப்பாட்டில் இன்றுவரை 4,018 முறைப்பாடுகளை விசாரணை செய்து முடித்துள்ளோம். அதில் 80 வீதமான முறைப்பாட்டாளர்கள் வருகைதந்து எங்கள் விசாரணைக்கு உறுதுணையாக இருந்து அறிக்கைகளைப் பெற்றனர்.

தற்போது எமது அலுவலகத்தில் பூர்வாங்க விசாரணை முடித்தவர்கள் சம்பந்தமாக 3 வகையான தொடர. நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றோம் அதில் முதலாவதாக இடைக்கால கொடுப்பனவாக இரண்டு லட்சம் ரூபா இதுவரைக்கும் 300 பேருக்கும் மேற்பட்வர்களுக்கு ஒரு கொடுப்பனவு வழங்கிருக்கின்றோம். அத்துடன் மரணச் சான்றிதழ் மற்றும் ஆள் காணப்படாதமை பற்றிய சான்றிதழ் போன்றவற்றிக்கும் சிபார்சுக்களைச் செய்து இதுவரைக்கும் இவற்றை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் காணாமல் போனவர்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின்படி வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் 15 பேரை நேரடியாகச் சந்தித்துக் கண்டு பிடித்து, அவர்களுடைய விவரங்களை பெற்று, அந்த விவரங்களின் படி அறிக்கையிட்டு 15 பேரின் முறைப்பாட்டுக் கோவைகளை முடிவுறுத்தியுள்ளோம்.

இடைக்கால நிவாரணம் என்பது காணாமல் போனவர்களுக்கான நஷ்டஈடு அல்ல. இது காணாமல் போனவர்களில் தங்கியிருக்கும் குடும்ப உறவினருக்கு ஓர் இடைக்கால நிவாரணம். இது விடயத்தில், அரசால் அறிவிக்கப்பட்ட 2 லட்சம் ரூபா கொடுப்பனவுக்கு உரியவர்களை நாங்கள் சிபார்சு செய்து கொண்டிருக்கின்றோம்.

அதேவேளை மரணசான்றிதழ்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்கள்தான் கேட்கின்றனர்.

அதேவேளை முறைபாட்டிற்கு விண்ணப்பித்து, விசாரணைக்கு வரும் 90 சதவீதத்தினர் சம்பந்தப்பட்டவர் காணப்படாதமைக்கான சான்றிதழ்களைக் கேட்டு வாங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த இடைக்கால நிவாரணமாக 2 லட்சம் ரூபா பெற்றுக் கொடுப்பதற்கு மேலதிகமாக, குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை 3 நிறுவனங்கள் – அதாவது முதலாவது காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இரண்டாவது ஓ.ஆர். எனப்படும் இழப்பீடுகளுக்கான அலுவலகம், மூன்றாவது சமாதானத்துக்கான அலுவலகம் ஆகிய மூன்றும் – இணைந்து வழங்கி வருகின்றன.

அதற்கு மேலதிகமாக காணாமல்போன ஒவ்வொருவருக்கும் 10 லட்சம் ரூபாவை வழங்க வேண்டும் என ஜனாதிபதி கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார். – என்றார்.

# மக்களின் ஆதரவுடன்தான் நாடு முழுவதிலும் சைவ ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன

## எதிர்ப்புக்கு மத்தியில் அல்ல என்கிறார் ரெலோ சுரேந்திரன்

"நாடு முழுவதும் சைவ ஆலயங்கள் மக்கள் ஆதரவுடன்தான் கட்டப்பட்டுள்ளன. எதிர்ப்புக்கு மத்தியில் அல்ல" – என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் ரெலோவின் பேச்சாளர் கு. சுரேந்திரன்.

நேற்றுத் தாம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

25 மாவட்டங்களிலும் இந்து ஆலயங்கள் கட்டப்பட்டுள்ள பொழுது பௌத்த விகாரைகளை வடக்கு, கிழக்கில் கட்டுவதற்கு எதற்குத் தடை என்று கேள்வி எழுப்பி உள்ளனர் இனவாத – மதவாத – மும்மூர்த்திகள்.

அனைத்து மாவட்டங்களிலும் சைவ ஆலயங்கள் அங்குள்ள பக்தர்களால், மக்கள் ஆதரவுடன், உரிய அனுமதி பெற்று, சட்டபூர்வமாக நாட்டு விதிமுறைகளை அனுசரித்து, கட்டப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றன. பொது மக்களின் காணிகளை அபகரித்தோ அல்லது தொல்லியலின் ஆதரவுடன் அரசு படைகளின் பாது காப்புடன் கட்டப்பட்டவை அல்ல. பௌத்தத்திற்கோ, பௌத்த மதத்திற்கோ, புத்த பெருமானுக்கோ எதிரானவர்கள் அல்லர் தமிழர்கள். மாறாக அவருடைய போதனைகளையும்



மதிப்பவர்கள் தமிழ் மக்கள்.

இனமாக – மதவாத – சக்திகள் இதை புரிந்து கொள்ள வேண்டும்.

பலாத்காரமாக மக்கள் காணிகளை அபகரித்து, பிரதேச மக்களின் எதிர்ப்புக்கும் போராட்டத்திற்கும் மத்தியில், சட்ட விரோதமாக பௌத்த விகாரைகள் அமைக்கின்ற நோக்கமே தவறானது. அந்த நோக்கத்தைத் தான் தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள். தொல்லியல் என்ற போர்வையில் பௌத்த விகாரைகளைக் கட்டி எழுப்பி விட்டு மக்கள் காணிகளையும் அபகரித்து நீங்கள் செய்ய முற்படுவது என்ன?

நல்லிணக்கம், புரிந்துணர்வு ஏற்படும் பட்சத்தில் எங்கெங்கு பௌத்த விகாரைகள் கட்டப்பட வேண்டும் என்பதை அங்கு வாழுகின்ற மக்களே தீர்மானிப்பார்கள். நீங்கள் வலோத்காரமாக பௌத்த விகாரைகளைக் கட்ட வேண்டிய தேவை ஏற்படாது.

தமிழ் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தாது, இனவாத, மதவாதங்களை வளர்த்துக்கொண்டு, அந்த நோக்கங்களை நிறைவேற்றும் விதத்தில் விகாரைகளைக் கட்ட தமிழ் மக்கள் அனுமதிக்கவில்லை என்பதால் நீங்கள் கூப்பாடு போடுவதில் அர்த்தமில்லை.

உங்கள் மறைமுக ஆக்கிரமிப்பு நோக்கத்தை நிறைவேற்ற தமிழ் மக்கள் ஒரு பொழுதும் அனுமதிக்கப் போவதில்லை. சிங்கள மக்களும் அதற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை. உங்களைப் போன்ற ஒரு சிலர் நாட்டின் அமைதியைக் குலைத்து, தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டி விடுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதற்கு ஒரு பொழுதும் நாட்டு மக்கள் இடமளிக்கப் போவதில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. அறகலயப் போராட்டத்தின் பாடங்களில் இருந்து நீங்கள் திருந்தவில்லை. விரைவில் நீங்கள் திருந்தும் காலம் வரும். – என்று உள்ளது.



# வவுனியா - மாமடு குளத்தில் புதையுண்ட யானை மீட்பு!

## பாதுகாப்பாகக் காட்டுக்குள் அனுப்பி வைப்பு

வவுனியா மாமடு குளத்தின் நீரேந்து பகுதியில் சேற்றினுள் புதையுண்ட நிலையில் சிக்குண்ட 05 வயது யானை பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது என வனஜீவராசிகள் திணைக்களத்தினர் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா மாமடு குளத்தின் நீரேந்து பகுதியிலே மாடு மேய்க்க சென்ற கிராம வாசி ஒருவர் புதையுண்ட நிலையில் யானை ஒன்று உயிருக்கு போராடுவதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து மாமடு பொலிஸாருக்குத்தகவல்வழங்கப்பட்டது. யானையை மீட்பதற்கான நடவடிக்கையை வனஜீவராசிகள் திணைக்களத்தினர், பொலிஸார் மற்றும் கிராமமக்கள் இணைந்து முன்னெடுத்தனர். யானை மீட்கப்பட்டு, பாதுகாப்பாக காட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

கடும் வெப்பம் காரணமாக நீரைப் பெற வந்த யானையே நீரேந்துப் பகுதியில் புதைந்து இருக்கலாம் எனவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.09.2023




இன்று நீங்கள் கடுமையான சூழல்களை சந்திக்க நேரிடும். பொறுமையுடன் கையாளுங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி சம நிலையுடன் இருக்க முயலுங்கள். தெய்வீகக் காரியங்கள் உங்கள் மனதிற்கு நிம்மதியையும் மன நிறைவையும் தரும்.

நீங்கள் உங்கள் பணியில் சில தவறுகளை செய்ய நேரலாம். பணி செய்யும் முறையை திட்டமிட்டு அமைத்துக் கொள்வது நல்லது.

இன்று உங்கள் வாழ்க்கைத் துணையாரின் விருப்பப்படி நடந்து கொள்ளுங்கள். இதன் மூலம் இல்லத்தில் தேவையற்ற குழப்பங்களைத் தவிர்க்கலாம்.

இன்று பண வரவிற்கான வாய்ப்புகள் குறைவாக காணப்படுகின்றது. கூடுதல் செலவினங்களை நீங்கள் சந்திக்க நேரலாம்.




இன்றைய நாள் மகிழ்ச்சிகரமாக அமையாது. நீங்கள் கடுமையாகப் போராட நேரலாம். இன்று அசௌகரியங்கள் காணப்படலாம். துயரமான சூழ்நிலை காரணமாக நீங்கள் திருப்தியையும் மன அமைதியையும் இழப்பீர்கள்.

இன்று பணியில் திருப்திகரமற்ற நிலை இருக்கும். பணியிடத்தின் சூழ்நிலையும் சாதகமாக இருக்காது.

நல்ல புரிந்துணர்வு இல்லாத காரணத்தால் உங்கள் வாழ்க்கைத் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம்.

இன்று பணப்புழக்கம் குறைவாகவே இருக்கும். இழப்புகளை சமாளிக்க பெரிய முதலீட்டிற்கான முடிவை தவிர்க்கவும்.

மன அழுத்தத்தின் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று அனைத்து விஷயங்களும் சுமுகமாக நடக்கும். உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்கள் மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் நல்ல வாய்ப்பு கிடைக்கும் அற்புதமான நாள்.

இன்று வளர்ச்சிக்கான சிறந்த ஒரு வாய்ப்பை நீங்கள் இழக்க நேரிடலாம். திறமையுடன் பணியாற்ற உங்கள் பணிகளை திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

நீங்கள்இன்று உங்கள் துணையுடன் மேம்போக்காகவும் சுமுகமாகவும் நடந்து கொள்ள வேண்டும். வலுவான அணுகுமுறை நல்லுறவை பாதிக்கும்.

இன்று மோசமான நிதிநிலைமை காணப்படுகின்றது. எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

இன்று சளி இருமல் போன்ற உபாதைகள் ஏற்டலாம்.




எதிர்காலத்தில் சாதிப்பதற்கான பெரிய கனவொன்றை இன்று காண்பீர்கள். உங்கள் இலக்கை நோக்கி உங்கள் ஆற்றலைப் பயன்படுத்துவீர்கள்.

மேலதிகாரிகள் உங்கள் திறமையை பாராட்டுவார்கள். உங்கள் செயலுக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்களைப் பெருமையாக நினைப்பார்கள்.

இன்று உங்கள் வாழ்க்கைத் துணையுடன் இனிமையான வார்த்தைகளையும் உணர்வுகளையும் பகிரந்து கொள்வீர்கள். உங்கள் எதிர்காலம் பற்றி முடிவு எடுப்பீர்கள்.

இன்று பண விஷயங்களில் சுதந்திரமாகவும் திருப்தியுடனும் செயல்படுவீர்கள். உபயோகமான காரியங்களுக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.




இன்று நீங்கள் துடிப்புள்ளவராக இயங்க மாட்டீர்கள். நீங்கள் உங்கள் செயல்களை விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் செய்ய வேண்டியது அவசியம்.

உங்கள் உழைப்பிற்கான பலன் இன்று கிடைக்கும். உங்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் வாழ்க்கைத் துணையிடம் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்ற நாள். உங்களுடைய சமநிலையான மற்றும் சமயோசித அணுகுமுறையே அதற்கு காரணமாக அமையும்.

பண வரவு தாராளமாகக் காணப்படும். உடனடி மற்றும் எதிர்கால தேவைகளுக்கான பணம் உங்களுக்கு கிடைக்கும்.

இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இன்று நீங்கள் நல்ல தேக பலத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் அசௌகரியங்களை உணர்வீர்கள். மன அழுத்தம் ஏற்படும். பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுவதன் மூலம் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இன்று சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நீங்கள் உங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மனக் குழப்பங்கள் காரணமாக தவறாக புரிந்து கொண்டு உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். அத்தகைய உணர்வுகளை தவிர்ப்பது நல்லது.

பண இழப்புகள் ஏற்படலாம். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று தலைவலி ஏற்படலாம். தியானம் மூலம் மன அழுத்தத்தை குறைக்கலாம்.




இன்று எதிர்பாராத சில நிகழ்வுகள் காரணமாக சற்று பதற்றமான நிலை காணப்படும். நீங்கள் என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் நிலை காணப்படும்.

இன்று வேலைகள் மலை போல் வந்து குவியும். எனவே அதற்கேற்றாற்போல் திட்டமிட்டு வேலை செய்வது நல்லது.

நகைச்சுவை உணர்வுடன் இருக்க முயலுங்கள். மனதை அமைதியாக வைத்திருங்கள். உங்கள் துணையுடன் பேசும் பொழுது அவரை புரிந்து கொண்டு நல்லுறவை பராமரிக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலை கவலையை அளிக்கக் கூடியதாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள்.

தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. இறைவழிபாட்டின் மூலம் அதிலிருந்து விடுபடலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு முன்னேற்றகரமான நாளாக அமையும். உங்கள் இலக்கை அடைவதற்கான வழிமுறைகளை காண்பீர்கள். உங்கள் பாதையில் வரும் தடைக் கற்களை உடைத்தெறிவீர்கள்.

இன்று உங்கள் திறமைக்கு பாராட்டு கிடைக்கும். புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

நீங்கள் இன்று உங்கள் வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வும் நல்லுறவும் மேம்படும்.

இன்று திருப்திகரமான நிதிநிலை இருக்கும். சேமிப்பு மூலம் பணவரவு கூடும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும். நீங்கள் நல்ல தேக பலத்துடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -05.09.2023

## தனுசு

நடப்பவை யாவும் நன்மைக்கே என்று எளிதாக எடுத்துக்கொண்டால் இன்று நற்பலன்களே கிட்டும். புதிய மனிதர்களுடன் பழகுவதற்கும் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் இன்று உகந்த நாள். உங்களைச் சுற்றியிருப்பவர்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்வதன் மூலம் உங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும்.

நீங்கள் எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி வேலை செய்வீர்கள். உங்களுடைய இந்த மனப்பான்மை காரணமாக வேலையை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுத்து உங்கள் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அமைதியாக சகஜமாகப் பழகுவீர்கள். அதனால் நல்ல புரிந்துணர்வும் நல்லுறவும் மேம்படும்.

## கும்பம்

உங்களின் குறிக்கோள்களை அடைய மிகச் சிறந்த நாளாக இந்த நாள் அமையும். பயணங்களால் வளர்ச்சி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. செழிப்பான எதிர்காலத்திற்கு இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இன்று மலை போல் குவியும் வேலையின் சுமை காரணமாக கவலைப்படுவீர்கள். திறமையுடன் பணியாற்ற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மனதிற்குள் அலைமோதும் கவலைகள் காரணமாக உங்கள் துணையுடன் பேசும் போது பேச்சில் கடுமை காணப்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். வரவுடன் செலவும் சேர்ந்து வருவது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நேர்மறையான சிந்தனைகள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## மகரம்

இன்று அசௌகரியங்களும் தேவையில்லாத மன வருத்தங்களும் மேலும் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று அதிக பணிகள் காரணமாக நீங்கள் பிஸியாக இருப்பீர்கள். வேலை அதிகமாக இருந்தாலும் புத்திசாலித்தனமாக சமாளிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு அல்லது வாக்குவாதம் ஏற்படலாம். நட்பான அனுகுமுறை தேவை.

நிதியைப் பொறுத்தவரை இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்பற்றாக்குறை ஏற்படலாம்.

முந்தைய இரவின் தூக்கமின்மை காரணமாக மன அழுத்தமும் அதன் விளைவாக தலைவலியும் காணப்படும்.

## மீனம்

இன்று நீங்கள் கவலையுடன் காணப்படுவீர்கள். மன அழுத்தமான சூழ்நிலைகளில் சமநிலை இழந்து காணப்படுவீர்கள். மனதை அமைதியுடனும் இலேசாகவும் வைத்திருக்க வெளியிடங்களுக்கு குடும்பத்துடன் செல்லுங்கள்.

இன்று உங்கள் வேலையில் பிஸியாக இருப்பீர்கள். பணி நிமித்தமாக பயணங்களை மேற்கொள்வீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். துணையுடனான உங்கள் பேச்சு இன்று பயனுள்ள பேச்சாக அமையும்.

சில ஆரம்பகட்ட போராட்டங்கள் மற்றும் தடைகளுக்கு பின் பணவரவு உண்டு. நீண்ட காலம் நிலுவையிலுள்ள பணம் கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan Group Chairman ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS
CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK 15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park


# சந்திரயான் - 3 இன் விக்ரம் லேண்டரை மீண்டும் தரையிறக்கும் முயற்சி வெற்றி!

நிலவின் தென் துருவத்தில் ஆய்வில் ஈடுபட்டு வரும் சந்திரயான் – 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் பகுதியை மேல் உயர்த்தி, மீண்டும் அதனை தரையிறக்கும் முயற்சிகள் வெற்றியளித்துள்ளது என இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ அறிவித்துள்ளது.

இதற்கான சோதனை நடவடிக்கை களை இஸ்ரோ முன்னெடுத்திருந்தது.

குறித்த லேண்டர் மேலே உயர்த்தப்பட்டு, அதனை கிடைப்பகுதியாக நகர்த்தி மீண்டும் தரையிறக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், லேண்டரின் சகல பகுதிகளும் சிறப்பாக இயங்குகிறது என இஸ்ரோ அறிவித்துள்ளது.




நிலவின் தென் துருவத்தில் ஆய் வினை நடத்துவதற்காக அனுப்பப்பட்ட சந்திரயான் –3 இன் விக்ரம் லேண்டர், கடந்த 23 ஆம் திகதி வெற்றிகரமாக நிலவில் தரையிறக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## ககன்யான் விண்கலத்தின் பரிசோதனையை அடுத்த மாதம் மேற்கொள்ளும் இஸ்ரோ!



சந்திரயான்-3 மற்றும் ஆதித்யா எல்-1 ஆகிய விண்கலங்களின் வெற்றிக்குப் பின்னர் ககன்யான் விண்கலத்தின் முதலாவது பரிசோதனை திட்டத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவ கமான இஸ்ரோ அடுத்த மாதம் மேற் கொள்ளவுள்ளது என தெரிவிக்கப்ப டுகிறது.

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ தீவிரமாக செயற் பட்டு வருகிறது என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, ககன்யான் திட்டத்தில் முதல் இரண்டு ரொக்கட்டுகளில் ஆளில்லா விண்கலம் அனுப்பி பரிசோதிக்கப்படும்.

அடுத்ததாக பூமியிலிருந்து 300 முதல் 400 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புவியின் கீழ் அடுக்கு சுற்று வட்ட பாதையில் விண்வெளி வீரர்கள் சில நாட்கள் சுற்றிவிட்டு திரும்பும் வகையில் விண்கலத்தை அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது என அறிவிக்கப் பட்டுள்ளது.

ககன்யான் திட்டத்துக்கான பல பரிசோதனை நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இஸ்ரோ பேச்சாளர் மரணம்!



இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவின் பேச்சாளர் வளர்மதி மாரடைப்பால் காலமானார்.

சென்னையில் உள்ள மருத்துவம னையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது மறைவுக்கு இஸ்ரோ விஞ் ஞானிகள் இரங்கல் தெரிவித்துள்ளனர். கடந்த 6 ஆண்டுகளாக இஸ்ரோ ஏவிய முக்கிய உந்துகணை நிகழ்வுகளின் போது வளர்மதி வர்ணனையாளராக பணியாற்றியுள்ளார்.


இஸ்ரோ விஞ்ஞானிகள் பலராலும் பாராட்டுப்பெற்ற ரேஞ்ச் ஸ்பீக்கர் வளர்மதியின் குரலுக்கு பல ரசிகர்கள் உள்ளனர். கடந்த ஜூலை 30 இல் சிங்கப்பூர் செயற்கைக்கோள்களை ஏந்தி சென்ற பி.எஸ்.எல்.வி சி56 உந்துகணை நிகழ்வை கடைசியாக அவர் வர்ணனை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## பா.ஜ.க. போலி செய்தியைப் பரப்புகிறது: உதயநிதி கண்டனம்

சனாதன ஒழிப்பு மாநாட்டில் தான் சனாதானக் கொள்கையை அழிக்க வேண்டும் என்றே பேசினேன். ஆனால் அதனை பா.ஜ.க. திரித்து போலியான செய்திகளைப் பரப்புகிறது என உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், நான் சனாதன தர்மத்தைத் தான் எதிர்த்தேன். அதை ஒழிக்க வேண்டும் என்று கூறினேன். அதனை நான் இங்கு மீண்டும் வலியுறுத் துகிறேன். ஆனால் சிலர் சிறுபிள்ளைத்த னமாக நான் இந்துக்கள் அழிப்பை ஊக்குவித்துள்ளேன் என பேசுகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

# ஜி 20 மாநாட்டில் பங்கேற்க சீன ஜனாதிபதி மறுப்பு: வருகையை உறுதிப்படுத்தினார் அமெரிக்க ஜனாதிபதி!






இந்தியாவில் நடைபெறவுள்ள ஜி-20 உச்சி மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜின்பிங் கலந்து கொள்ளமாட்டார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 9 ஆம் மற்றும் 10 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள ஜி-20 உச்சி மாநாட்டை முன்னிட்டு டெல்லியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இந்த உச்சி மாநாட்டில்சீனா உட்பட 20 உறுப்பு நாடுகளை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன், ஏனைய நாடுகளின் தலைவர்களும் பங்கேற்க உள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்காமல் இருப்பதற்கு சீன ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதுதொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த பைடன், ஏமாற்றமளிக்கிறது. ஆனால், நான் அவரை சந்திக்க போகிறேன் என கூறியுள்ளார்.

அண்மைய காலமாக சீனா மற்றும் அமெரிக்கா இடையேயான உறவில் பதற்றநிலை அதிகரித்து காணப்படுகிறது.

தைவான் விவகாரம், உளவு பலூன் விவகாரம் உள்ளிட்டவை எதிரொலித்த நிலையில், ஏற்றுமதி பொருட்களுக்கான பைடன் அரசின் தடை, கியூபாவில் இருந்து சீனாவின் கண்காணிப்பு வேலை உள்ளிட்டவற்றால் இரு நாடுகளுக்கிடையில் பதற்றம் அதிகரித்தது.

எனினும், சமீபத்திய மாதங்களில் பைடன் அரசிலுள்ள அதிகாரிகள் அதிகளவில் சீனாவுக்கு சென்று, உறவை மேம்படுத்துவதற்கான பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், இந்தியாவில் நடைபெறவுள்ள ஜி-20 உச்சி மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜின்பிங் கலந்து கொள்வார் என பைடன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

---

## உலகிலேயே மிக நீளமான சிகை பெண்!



உலகிலேயே மிக நீளமான சிகை உள்ளவராக அமெரிக்காவின் டேமி மானிஸ் தெரிவாகியுள்ளார்.

அமெரிக்காவின் தெற்கு பகுதியில் உள்ள டென்னிசி மாநிலத்தின் நாக்ஸ்வில் பகுதியை சேர்ந்தவர் 58 வயதான டேமி மானிஸ். 1980 களில் பிரசித்தி பெற்றிருந்த 'முல்லெட்' என அழைக்கப்படும் சிகை வடிவத்தின் மீது மானிஸ் ஆர்வம் கொண்டார்.

தானும் இதே போன்று சிகையை நீளமாக வளர்த்து கொள்ள வேண்டும் என விரும்பினார். இதன் காரணமாக 1990 பெப்ரவரி மாதம், அவர் கடைசி யாக ஒரு முறை சிகை திருத்தும் நிலையத் திற்கு சென்று இதற்கேற்றவாறு சில மாற்றங்களை செய்து கொண்டார்.

தற்போது இவரது சிகையின் நீளம் 5 அடி 8 அங்குலம்.கின்னஸ் உலக சாதனை பதிவேட்டிற்கு, மானிஸ் தனது சிகையின் நீளம் தெரியும் விதமாக ஒரு காணொளியை அனுப்பியுள்ளார்

இதனையடுத்து, கின்னஸ் அமைப்பு, உலகிலேயே மிக நீளமான முல்லெட் வகை சிகை உள்ளவராக மானிஸை அதிகாரப்பூரமாக அறிவித்துள்ளது.

## ஈக்குவடோர் கைதிகளால் 57 அதிகாரிகள் விடுதலை!






ஈக்வடோரில் சிறைச்சாலை பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 50 சிறைக்காவலர்களும் 7 பொலிஸாரும் கைதிகளால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தென் அமெரிக்க நாடான ஈக்வடோரின் 6 சிறைகளில் குறித்த அதிகாரிகள், கைதிகளால் பணயக்கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என அந்த நாட்டு உள்துறை அமைச்சர் யுவான் சபாத்தா கடந்த வியாழக்கிழமை தெரிவித்திருந்தார்.

மேற்படி 57 அதிகாரிகளும் கைதிகளால் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்றுள்ளது என்றும் க்வடோர் சிறைச்சாலை அதிகாரிகள் கடந்த 01ஆம் திகதி தெரிவித் துள்ளனர்.

சிறையில் தமது பலத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை விரும்பாத குற்றாவளிகள் குழுக்க ளின் ஏற்பாட்டில் அதிகாரிகள் கடத்தப்பட்டிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் குய்டோவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இரு குண்டுவெடிப்புகளுக்கும் இக்குழுக்கள் காரணம் என அதிகாரிகள் குற்றம் சுமத்தியிருந்தனர்.